ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1494 - 2007 අප්‍රේල් 20 වැනි සිකුරාදා - 2007.04.20

*1494 ஆம் இலக்கம் – 2007 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (IIஆ) – விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 262 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | - |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 263 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள்* ***வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.*** *வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.*

*வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்*** *இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2007, ஏப்பிறல் 27 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2007, ஏப்பிறல் 12 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.*

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2007 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## இலங்கைப் புகையிரத சேவைகள்

### இலங்கைப் புகையிரதப் பகுதிக்கு நட்டுக்கள், பெரூள்கள் மற்றும் வோஷர்களுடன் கூடிய முழுமையான 45,000 டிஸ்ரன்ஸ் போல்ற்றுக்களை (Distance Bolts Complete with Nuts, Ferrules and Washers) வழங்குவதற்கான கேள்விகள்

இலங்கை, கொழும்பு 10, ஓல்கொட் மாவத்தை, இலங்கைப் புகையிரத சேவைகள் (புகையிரதத் தலைமையகம்), திணைக்கள கொள்வனவுச் சபை (பெரியது), தலைவர் அவர்களால் இலங்கையில் நட்டுக்கள், பெரூள்கள் மற்றும் வோஷர் களுடன் கூடிய முழுமையான 45,000 டிஸ்ரன்ஸ் போல்ற்றுக்களை (Distance Bolts Complete with Nuts, Ferrules and Washers) வழங்குவதற்கான சீலிடப்பட்ட கேள்விகள் உற்பத்தியாளர்கள்/ வழங்குனர்களிடமிருந்து ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. ஒப்பந்தக்காரர்கள் தமது விலை மனுக்களை நேரடியாகவோ அல்லது இலங்கையிற் பதிவுசெய்யப்பட்ட வர்களும், அதிகாரத் தத்துவம் பெற்றவர்களுமான அங்கீகரிக்கப்பட்ட முகவர்களினூடாக சமர்ப்பிக்கலாம்.

2. மீளப்பெறப்பட முடியாத கேள்விப்பணமாக ரூபா 2,500 ஐ அல்லது அதற்குச் சமமான இலகுவாக மாற்றீடு செய்யக்கூடிய தொகையைச் செலுத்துவதன் மூலம் புகையிரதக் களஞ்சிய அத்தியட்சகர் காரியாலயம், ஓல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கை அல்லது வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங் களிலிருந்து 2007.06.08 ஆந் திகதி பிற்பகல் 3.00 மணிவரை (இலங்கை நேரம்) பெறப்படும் கேள்விப் பத்திரங்களில் மட்டுமே கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

3. கேள்விகள் 2007.06.12 பிற்பகல் 2.00 மணிக்கு (இலங்கை நேரம்) மூடப்படும்.

4. உற்பத்தியாகும்/வழங்கப்படும் நட்டுக்கள், பெரூள்கள் மற்றும் வோஷர்களுடன் கூடிய முழுமையான டிஸ்ரன்ஸ் போல்ற்றுக்கள் ஐ. எஸ். ஓ. 9001:2000, பீ. எஸ். ஈ. என். ஐ. எஸ். ஓ. 9001:2000 கம்பனி சான்றிதழுக்கு அமைவானதாக அல்லது அதற்குச் சமமான சர்வதேசதர முகாமைத்துவ முறைமை நியமனத்துக்கு உரித்தானதாக பெறுநரினால் அங்கீகரிக்கப்படக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

5. "இலங்கைப் புகையிரத தலைமையகம், ஓல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கை"யில் கேள்விகள் மூடப்பட்டு உடனடியாகத் திறக்கப்படும். கேள்வி ஒப்பந்தக்காரர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள், கேள்விகள் திறக்கப்படும்போது சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

6. சீலிடப்பட்ட கேள்விகளை பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ கையளிப்பதன் மூலமாகவோ பின்வரும் முகவரியிற் சமர்ப்பிக்கலாம் :- தலைவர், திணைக்கள கொள்வனவுச் சபை (பெரியது), இலங்கைப் புகையிரத சேவைகள், புகையிரத தலைமையகம், ஓல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கை.

7. கேள்விப்பத்திர ஆவணங்களை எந்தவித கட்டணங்களுமின்றி புகையிரதக் களஞ்சிய அத்தியட்சகர் காரியாலயம், ஓல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கையில் பரிசீலனை செய்வதுடன் மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து பின்வரும் முகவரியிற் தொடர்புகொள்ளவும் :- புகையிரதக் களஞ்சிய அத்தியட்சகர், புகையிரதக் களஞ்சியத் திணைக்களம், ஓல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கை. தொலைபேசி இலக்கங்கள் : 94(11)2432044 அல்லது 94(11)2436818

தலைவர்,
திணைக்கள கொள்வனவுச் சபை (பெரியது),
இலங்கைப் புகையிரத சேவைகள்.

தொடர்பு இலக்கம் : எஸ். ஆர். எஸ்/எவ் 6564

4-401

---

## இலங்கைப் புகையிரத சேவைகள்

### பிற்றுமினஸ் முலாம் பூசப்பட்ட 300000 இலாஸ்டிக் தண்டவாள கிளிப்புக்களை வழங்குதல்

இலங்கை, கொழும்பு 10, ஓல்கொட் மாவத்தை, இலங்கைப் புகையிரத சேவைகள் (புகையிரதத் தலைமையகம்), திணைக்கள கொள்வனவுச் சபை (பெரியது), தலைவர் அவர்களால் இலங்கையில் புகையிரதப் பாதையை மீளமைப்பதில் உபயோகிப் பதற்கான பிற்றுமினஸ் முலாம் பூசப்பட்ட 300000 இலாஸ்டிக் தண்டவாள கிளிப்புக்களை வழங்குவதற்கான சீலிடப்பட்ட கேள்விகள் உற்பத்தியாளர்கள்/ விநியோகத்தர்களிடமிருந்து ஏற்றுக்கொள்ளப் படுகின்றன. ஒப்பந்தக்காரர்கள் தமது விலைமனுக்களை நேரடி யாகவோ அல்லது இலங்கையிற் பதிவுசெய்யப்பட்டவர்களும், அதிகாரத் தத்துவம் பெற்றவர்களுமான அங்கீகரிக்கப்பட்ட முகவர்களி னூடாக சமர்ப்பிக்கலாம்.

2. மீளப்பெறப்பட முடியாத கேள்விப்பணமாக ரூபா 3,000 ஐ அல்லது அதற்குச் சமமான இலகுவாக மாற்றீடு செய்யக்கூடிய தொகையைச் செலுத்துவதன் மூலம் புகையிரதக் களஞ்சிய அத்தியட்சகர் காரியாலயம், ஓல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கையில் அல்லது வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களிலிருந்து 2007.06.01 ஆந் திகதி பிற்பகல் 3.00 மணிவரை (இலங்கை நேரம்) பெறப்படும் கேள்விப் பத்திரங்களில் மட்டுமே கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

3. உற்பத்தியாகும் இலாஸ்டிக் தண்டவாள கிளிப்புக்கள் ஐ. எஸ். ஓ. 9001:2000/ஐ. எஸ். ஓ. 9002:1994/பீ. எஸ். ஈ. என். ஐ. எஸ். ஓ. 9001:2000/பீ. எஸ். ஈ. என். ஐ. எஸ். ஓ. 9002:1994 கம்பனி சான்றி தழுக்கு அமைவானதாக அல்லது அதற்குச் சமமான சர்வதேசதர முகாமைத்துவ முறைமை நியமனத்துக்கு உரித்தானதாக இருத்தல் வேண்டும்.

4. கேள்விகள் 2007.06.05 பிற்பகல் 2.00 மணிக்கு (இலங்கை நேரம்) மூடப்படும். சீலிடப்பட்ட கேள்விகளை பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ கையளிப்பதன் மூலமாகவோ பின்வரும் முகவரியிற் சமர்ப்பிக்கலாம் :- தலைவர், திணைக்கள கொள்வனவுச் சபை (பெரிய), இலங்கைப் புகையிரத சேவைகள், புகையிரத தலைமையகம், ஓல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கை.

5. மேலே பந்தி (4) இல் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் கேள்விகள் திறக்கப்படும். கேள்வி ஒப்பந்தகாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் கேள்விகள் திறக்கப் படும்போது சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

6. கேள்விப்பத்திர ஆவணங்களை எந்தவித கட்டணங்களுமின்றி புகையிரதக் களஞ்சிய அத்தியட்சகர் காரியாலயம், ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கையில் பரிசீலிக்கலாம்.

7. மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து பின்வரும் முகவரியிற் தொடர்புகொள்ளவும் :- புகையிரதக் களஞ்சிய அத்தியட்சகர், புகையிரதக் களஞ்சியத் திணைக்களம், த. பெ. இல. 1347, ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கை. தொலைபேசி இலக்கங்கள் : 94(11)2432044 அல்லது 94(11)2436818

தலைவர்,
திணைக்கள கொள்வனவுச் சபை (பெரிய).

தொடர்பு இலக்கம் : எஸ். ஆர். எஸ்/எவ் 6563

4-400

# ஏல விற்பனைகள்

**தேசிய சேமிப்பு வங்கி**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின் கீழான விற்பனை*

**மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹேவகம் கோறளை பல்லேபற்றுவின் ஹோமாகம பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பிட்டிபானவில் அமைந்துள்ள அத்துகலாலந்த மற்றும் வன்கெடி வெலகும்புற என்று அழைக்கப்படும் காணியும் 1999.07.11 ஆந் திகதியிடப்பட்ட 1119 ஆம் இலக்க வரைபடத்திற் காட்டப்பட்ட 11.20 பேர்ச்சஸ் விஸ்தீரணமுள்ளதும் துண்டு 9 என அடையாளமிடப் பட்டதுமான பெறுமதிமிக்க காணியின் ஏல விற்பனை**

*(87/4 நியன்டகல பன்னிப்பிட்டிய முகவரியைச் சேர்ந்த செல்வி டபிள்யு. கே. என். பெரேராவினால் இச் சாதனம் தேசிய சேமிப்பு வங்கிக்கு ஈடு வைக்கப்பட்டதுமாகும்.)*

ஆதனத்தின் விவரணம்.- மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹேவாகம் கோறளை பல்லேபற்றுவின் ஹோமாகம பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பிட்டிபானவில் அமைந்துள்ள அத்துகலாலந்த மற்றும் வன்கெடிவெலகும்புற என்று அழைக்கப்படும் காணியும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் திரு. பி. எச். எம். எல். பிரேமசந்திரவினால் ஆக்கப்பட்ட 1999.07.11 ஆந் திகதியிட்ட 1119 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்ட துண்டு 9 என அடையாளமிடப்பட்டதும் - வடக்கில் : துண்டு 5 ஐயும் 8 ஐயும் ; கிழக்கில்: துண்டு 13 (30 அடி அகலமான பாதை ஒதுக்கீடு 9 ஐயும் ; தெற்கில் : துண்டு 10 ஐயும் ; மேற்கில் : பெப்போல்கஹஹெனவையும் எல்லைகளாகக் கொண்டதும் சொல்லப்பட்ட 1119 ஆம் இலக்க வரைபடத்திற்கமைய பதினொன்று தசம் இரண்டு சைபர் (0ஏ. 0றூ. 11.20பே.) விஸ்தீரணம் கொண்டதும் ஹோமாகம காணிப்பதிவகத்தில் ஜீ 1202/236 இல் பதிவு செய்யபபட்டதுமான துண்டு 9 எனும் பிரித்து வரையறுத்த காணித்துண்டு முழுவதும்.

கீழே விபரிக்கப்பட்டுள்ள காணியின் மேலாகவும் ஊடாகவும் செல்வதற்கான பாதை மற்றும் ஏனைய சேவைகளுக்கான உரித்தும் உள்ளடங்கலாகவும்:-

மேலே சொல்லப்பட்ட பிட்டியானவில் அமைந்துள்ள அத்துகலாலந்த மற்றும் வன்கெடிவெல கும்புற என அழைக்கப்படும் காணியின் சொல்லப்பட்ட 1119 ஆம் இலக்க வரைபடத்தின் துண்டு 13 (30 அடி அகல பாதை ஒதுக்கு) என அடையாளமிடப்பபட்டதும் - வடக்கில் : துண்டுகள் டி2, 3, 21, 36, 35, 34, 55, 45 - 48 ஐயும் ; கிழக்கில் : துண்டுகள் 55, 21-25, 30 ஐயும் கி. ச. பாதையையும் ; தெற்கில் : துண்டுகள் 44, 43, 2, 41, 40, 39, 32, 20, 19 ஐயும் ; மேற்கில் : துண்டுகள் 16, 15, 14, 12, 11, 10, 9, 8, 6 ஐயும் எல்லைகளாகக் கொண்டதும் 2 இரண்டு றூட் ஏழு தசம் மூன்று மூன்று பேர்ச்சஸ் (0ஏ. 2றூ. 7.33பே.) விஸ்தீரணமுள்ளதும் ஹோமாகம காணிப்பதிவ கத்தில் ஜீ/1202/237 இல் பதிவு செய்யப்பட்டதும்.

**ஆதனத்திற்குச் செல்லும் வழி.**- கோட்டாவ நகரிலிருந்து ஹொரண வீதியில் (280 ஆம் இலக்க பஸ் பாதை) 11 கி. மீ. வரை சென்று சரளைக் கற் பாதை வழியாக விவேகாராம கோவில் சந்தியை அடையவும். பின்னர் இடது பக்கம் திரும்பி மேலேயுள்ள பாதையில் 200 மீற்றர் வரை சென்று இடது கைப்பக்கத்தில் உள்ள பிரதான காணியை அடையலாம். சொல்லப்பட்ட குறித்த காணியை இடது கைப்பக்கத்தில் உள்ள பாதையின் வலது புறத்தில் உள்நோக்கிச் செல்லும் 9 மீற்றர் அகல பாதையில் 150 மீட்டர்கள் வரை சென்று அடையலாம்.

இவ்வாதனம் பகிரங்க ஏலம் மூலம் 2007, மே 10 ஆந் திகதி வியாழக்கிழமை மு. ப. 11.00 மணிக்கு அதில் நிற்கும் சகலதும் உள்ளடங்கலாக அதே இடத்தில் பொது ஏலத்தின் மூலம் விற்கப்படும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.**- ஏலத்தைப் பெற்ற கொள்வன வுக்காரர் விற்பனை முடிந்தவுடன் பின்வரும் தொகைகளை ஒவ்வொரு ஆதனத்தின் பேரிலும் காசாகக் கொடுக்க வேண்டும் :

(1) கொள்வனவு விலையின் 25% ;

(2) பிரதேச சபைக்கு வரியாக கொள்வனவு விலையின் 1% ;

(3) ஏலதாரர் தரகாக கொள்வனவு விலையின் 2 1/2% (இரண்டரை வீதம் மட்டும்) ;

(4) மொத்த விளம்பரச் செலவாக ரூபா 81,882 ;

(5) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுபவரின் கட்டணமாக ரூபா 500 ;

(6) விற்பனை நிபந்தனைகளை அத்தாட்சிப்படுத்துவதற்காக நொத்தாரிசுக் கட்டணமாக ரூபா 3,000.

(7) விற்பனை நிபந்தனை ரூபா 750.

கொள்வனவு விலையின் மீதி 75% விற்பனைத் திகதியிலிருந்து முப்பது (30) நாட்களுக்குள்ளாக வங்கிக்குச் செலுத்தப்பட வேண்டும்.

விற்பனை நிபந்தனைகளையும் மேலதிக விபரங்களையும் பெறுவதற்கு தொடர்பு கொள்ள வேண்டியவர்- உதவிப் பொது முகாமையாளர் (கடன்), தேசிய சேமிப்பு வங்கி, இல. 255, காலி வீதி, கொழும்பு 3, தொலைபேசி இல. : 011- 2576132

சொக்மன் அன்ட் சமரவிக்ரம,
பட்டய ஏலதராரர்களும் இலங்கையின்
அரச, தனியார்துறை வங்கிகளதும்
மதிப்பீட்டாளர்களும் நீதிமன்ற தரகர்களும்.

| நகர அலுவலகம் : | தலைமை அலுவலகம் |
|---|---|
| 290, ஹவ்லொக் றோட், | 24, டொறிங்ரன் வீதி, |
| கொழும்பு 5. | கண்டி. |
| தொலைபேசி :011-2585408 | தொலைபேசி : 081-2224371 |
| 011-2502680 | 081-2227593 |
| தொலைநகல் : 011-2588176 | தொலை நகல் : 081-2224371 |
| மின்அஞ்சல் : samera@sri lanka.net | மின்அஞ்சல் : samera@ diamond.lanka.net |

4-303

---

## தேசிய சேமிப்பு வங்கி

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின் கீழான விற்பனை

**மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், பாணந்துறை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட ஹிரண கிராமத்தில் அமைந்துள்ள ரத்னகிரிய எஸ்டேட் என அழைக்கப்படுவதும் 1991.08.08 ஆந் திகதியிட்ட 3518 ஆம் இலக்க வரைபடத்திற்கமைய 14 பேர்ச்சஸ் விஸ்தீரணமுடைய துண்டு எச் என அடையாளமிடப்பட்ட பெறுமதிமிக்க காணியின் ஏல விற்பனை**

*(பொல்வத்த, கேவத்த, கொக்மடுவ, வெலிகமவைச் சேர்ந்த திரு. ஜீ. எச். கே. சுஜீவவினால் இவ் ஆதனம் தேசிய சேமிப்பு வங்கிக்கு ஈடு வைக்கப்பட்டது.)*

**ஆதனத்தின் விவரணம்.**- மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், டொட்டமுனவின் பாணந்துறை, தல்பிட்டி டெபடவில் பாணந்துறை பிரதேச சபை தந்திரிமுல்ல உப அலுவலக எல்லைக்குட்பட்ட கலடியுட் மற்றும் ஹிரண கிராமங்களில் அமைந்துள்ள ரத்னகிரிய எஸ்டேட் என அழைக்கப்படும் காணியும் அதிலுள்ள கட்டிடங்கள், மரங்கள், தாவரங்கள் மற்றும் அதில் நிற்கும் அனைத்தும் உள்ளடங்ளாகவும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் திரு. பி. எல். டி. பெர்னான்டோவினால் ஆக்கப்பட்ட 1991, ஓகத்து 8 ஆந் திகதியிட்ட 3518 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்ட துண்டு எச் என அடையாளமிடப்பட்டதும் - வடக்கில் : துண்டு ஜீ ஐயும் ; கிழக்கில் : 448 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்ட துண்டு 4 ஐயும் ; தெற்கில் : 448 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்ட துண்டு பீ (பாதை ஒதுக்கு) ஐயும் ; மேற்கில் : துண்டு 1 ஐயும் எல்லைகளாகக் கொண்டதும் சொல்லப்பட்ட 3518 ஆம் இலக்க வரைபடத்திற்கமைய பதினான்கு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 14பே.) விஸ்தீரணம் கொண்டதும் பாணந்துறை காணிப்பதிவகத்தில் எப் 125/ 287 இல் பதிவு செய்யப்பட்டதுமான துண்டு எச் எனும் பிரித்து வரையறுத்த காணித்துண்டு முழுவதும்.

உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் சி. டபிள்யூ. டி. நெய்ஸ் இனால் ஆக்கப்பட்ட 1961, திசெம்பர் 27 இலிருந்து 29 ஆந் திகதியிட்ட 448 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டுகள் 'ஏ' மற்றும் 'பீ' உம் சொல்லப்பட்ட 3518 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 1 என அடையாளமிடப்பட்ட பாதை ஒதுக்கின் மேலாகவும் ஊடாகவும் செல்வதற்கான பாதையுரித்தும் உள்ளடங்களாக.

**ஆதனத்திற்குச் செல்லும் வழி.**- காலி வீதி வழியாக பாணந்துறை வைத்தியசாலைச் சந்தி வரை சென்று, இடது பக்கம் திரும்பி ஹிரண பாதையூடாக ஹிரண ஏஜன்ட் பென்ட் சந்திவரை சென்று பின்னர் ரத்னகிரியாவத்த ஒழுங்கையில் 6 ஆவது ஒழுங்கை வரை செல்லவும். 6 ஆவது ஒழுங்கை யூடாக 300 மீற்றர்கள் செல்லவும்.

இவ்வாதனம் பகிரங்க ஏலம் மூலம் 2007, மே 9 ஆந் திகதி புதன்கிழமை மு. ப. 11.00 மணிக்கு அதில் நிற்கும் சகலதும் உள்ளடங்கலாக அதே இடத்தில் பொது ஏலத்தின் மூலம் விற்கப்படும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.**- ஏலத்தைப் பெற்ற கொள்வன வாளர் விற்பனை முடிந்தவுடன் பின்வரும் தொகைகளை ஒவ்வொரு ஆதனத்தின் பேரிலும் காசாகக் கொடுக்க வேண்டும் :

(1) கொள்வனவு விலையின் 25% ;
(2) பிரதேச சபைக்கு வரியாக கொள்வனவு விலையின் 1% ;
(3) ஏலதாரர் தரகாக விற்பனை விலையின் 2 1/2% (இரண்டரை வீதம் மட்டும்) ;
(4) மொத்த விளம்பரச் செலவாக ரூபா 89,197 ;
(5) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுபவரின் கட்டணமாக ரூபா 500 ;
(6) விற்பனை நிபந்தனைகளை அத்தாட்சிப்படுத்துவதற்காக நொத்தாரிசுக் கட்டணமாக ரூபா 3,000.
(7) விற்பனை நிபந்தனைகள் ரூபா 750.

கொள்வனவு விலையின் மீதி 75% விற்பனைத் திகதியிலிருந்து முப்பது (30) நாட்களுக்குள்ளாக வங்கிக்குச் செலுத்தப்பட வேண்டும்.

விற்பனை நிபந்தனைகளையும் மேலதிக விபரங்களையும் பெறுவதற்கு தொடர்பு கொள்ள வேண்டியவர்- உதவிப் பொது முகாமையாளர் (கடன்), தேசிய சேமிப்பு வங்கி, இல. 255, காலி வீதி, கொழும்பு 3, தொலைபேசி இல. : 011- 2576132

சொக்மன் அன்ட் சமரவிக்ரம,
பட்டய ஏலதராரர்களும், இலங்கையின்
அரச, தனியார்துறை வங்கிகளதும்
மதிப்பீட்டாளர்களும், நீதிமன்ற தரகர்களும்.

| நகர அலுவலகம் : | தலைமை அலுவலகம் |
|---|---|
| 290, ஹவ்லொக் றோட், | 24, டொறிங்ரன் வீதி, |
| கொழும்பு 5. | கண்டி. |
| தொலைபேசி :011-2585408 | தொலைபேசி : 081-2224371 |
| 011-2502680 | 081-2227593 |
| தொலைநகல் : 011-2588176 | தொலை நகல் : 081-2224371 |
| மின்அஞ்சல் : samera@sri lanka.net | மின்அஞ்சல் : samera@ diamond.lanka.net |

4-304

### தேசிய சேமிப்பு வங்கி

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின் கீழான விற்பனை*

**வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், கட்டுகம்பொல ஹத்பத்து கட்டுகம்பொல கோறளை (தெற்கு) "டன்டகமுவ" வில் அமைந்துள்ள கம்மாசம்ஹேன என அழைக்கப்படுவதும் 1982.05.01 ஆந் திகதியிட்ட 99 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்ட ஒரு றூட் விஸ்தீரணம் கொண்ட துண்டு 3 என அடையாளமிடப்பட்ட பெறுமதிமிக்க காணியின் ஏல விற்பனை**

*(ஹம்மல்லாவ வீதி, டன்டகமுவ, குளியாப்பிட்டிய முகவரியைச் சேர்ந்த திரு. டி. ஜீ. பீ. எம். ஏ. பன்னேஹெக்கவினால் இவ் ஆதனம் தேசிய சேமிப்பு வங்கிக்கு ஈடு வைக்கப்பட்டுள்ளது.)*

**ஆதனத்தின் விவரணம்.**- வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், கட்டுகம்பொல கோறளை (தெற்கு) கட்டுகம்பொல ஹத்பத்துவின் குளியாப்பிட்டிய பிரதேச சபை எல்லைகளுக்குட்பட்ட டன்டகமுவவில் அமைந்துள்ள கம்மாசம்ஹேன என அழைக்கப்படும் காணியும் அதிலுள்ள கட்டிடங்கள், மரங்கள், தாவரங்கள் மற்றும் அதில் நிற்கும் சகலதும் உள்ளடங்களாகவும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் திரு. டி. எச். கொளூரேயினால் ஆக்கப்பட்ட 1982.05.01 ஆந் திகதியிட்ட 99 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 3என அடையாளமிடப்பட்டதும் - வடக்கில் : பி. பி. ஆரோன் சிங்கோவினால் கோரப்படும் கனுகெட்டிய பில்லாவயையும் ; கிழக்கில் : துண்டு 4 ஐயும் ; தெற்கில் : பாதையையும் ; மேற்கில் : துண்டு 2 ஐயும் எல்லைகளாகக் கொண்டதும் சொல்லப்பட்ட 99 ஆம் இலக்க வரைபடத்திற்கமைய ஒரு றூட் (0ஏ. 1றூ. 0பே.) விஸ்தீரணமுள்ளதும் குளியாப்பிட்டிய காணிப்பதிவகத்தில் K 153/35 இன் கீழ் பதிவு செய்யப்பட்டதும் மேலே சொல்லப்பட்ட 99 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டவாறு மேலாகவும் ஊடாகவும் செல்வதற்கான பாதை உரித்தும் உள்ளடங்கலாக பிரித்து வரையறுத்த காணித்துண்டு முழுவதும்.

**ஆதனத்திற்குச் செல்லும் வழி.**- குளியாப்பிட்டிய, மீகஹகெடுவ சந்தியிலிருந்து பன்னலை வீதியூடாக 1 கி. மீ. வரை சென்று டன்டுகமுவ கோவில் சந்தியை அடைந்து கோவிலுக்குச் செல்லும் தார் பாதையில் இடது பக்கமாகத் திரும்பி 150 மீற்றர் வரை செல்லவும். வலது பக்கமாக ஹம்மலாவ வீதியில் (மண்பாதை) டன்டகமுவ "சன்கா" அலுவலகத்தைக் கடந்தவுடன் 200 மீற்றர் வரை சென்று சொல்லப்பட்ட பாதையின் இடது பக்கத்தில் பாதையின் முகப்பில் ஆதனத்தை அடையலாம்.

இவ்வாதனம் பகிரங்க ஏலம் மூலம் 2007, மே 16 ஆந் திகதி புதன்கிழமை மு. ப. 11.00 மணிக்கு அதில் நிற்கும் சகலதும் உள்ளடங்கலாக அதே இடத்தில் பொது ஏலத்தின் மூலம் விற்கப்படும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.**- ஏலத்தைப் பெற்ற கொள்வனவாளர் விற்பனை முடிந்தவுடன் பின்வரும் தொகைகளை ஒவ்வொரு ஆதனத்தின் பேரிலும் காசாகக் கொடுக்க வேண்டும் :

(1) கொள்வனவு விலையின் 25% ;
(2) பிரதேச சபைக்கு வரியாக கொள்வனவு விலையின் 1% ;
(3) ஏலதாரர் தரகாக கொள்வனவு விலையின் 2 1/2% (இரண்டரை வீதம் மட்டும்) ;
(4) மொத்த விளம்பரச் செலவாக ரூபா 55,500 ;
(5) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுபவரின் கட்டணமாக ரூபா 500 ;
(6) விற்பனை நிபந்தனைகளை அத்தாட்சிப்படுத்துவதற்காக நொத்தாரிசுக் கட்டணமாக ரூபா 3,000.
(7) விற்பனை நிபந்தனைகளுக்காக ரூபா 750.

கொள்வனவு விலையின் மீதி 75% விற்பனைத் திகதியிலிருந்து முப்பது (30) நாட்களுக்குள்ளாக வங்கிக்குச் செலுத்தப்பட வேண்டும்.

விற்பனை நிபந்தனைகளையும் மேலதிக விபரங்களையும் பெறுவதற்கு தொடர்பு கொள்ள வேண்டியவர்- "உதவிப் பொது முகாமையாளர் (கடன்), தேசிய சேமிப்பு வங்கி, இல. 255, காலி வீதி, கொழும்பு 3", தொலைபேசி இல. : 011- 2576132

சொக்மன் அன்ட் சமரவிக்ரம,
பட்டய ஏலதாரர்களும், இலங்கையின்
அரச, தனியார்துறை வங்கிகளதும்
மதிப்பீட்டாளர்களும், நீதிமன்ற தரகர்களும்.

| *நகர அலுவலகம் :* | *தலைமை அலுவலகம்* |
|---|---|
| 290, ஹவ்லொக் றோட், கொழும்பு 5. | 24, டொறிங்ரன் வீதி, கண்டி. |
| தொலைபேசி : 011-2585408, 011-2502680 | தொலைபேசி : 081-2224371, 081-2227593 |
| தொலைநகல் : 011-2588176 | தொலை நகல் : 081-2224371 |
| மின்அஞ்சல் : samera@srilanka.net | மின்அஞ்சல் : samera@diamond.lanka.net |

4-305

---

### மேல் மாகாண உயர் நீதிமன்றம்

மர்சன்ட் பேங்க் ஒப் ஸ்ரீலங்கா
லிமிட்டெட்
பேங்க் ஒப் சிலோன் மர்சன்ட் டவர்
இல. 28, ஸென். மைக்கல் வீதி,
கொழும்பு 03 மற்றும்
(முன்னர் இல. 189, காலி வீதி,
கொள்ளுப்பிட்டி).

..............................................*மனுதாரர்*

வழக்கு இல. :
எச். சீ. (சிவில்) 40/2004 (1)
பெறுமதி : மில்லியன் 25.0
ஈட்டு ஆதனம் : ஈட்டு ஆதனம்
செயற்பாடு : பொது

எதிராக

ஹிக்கடுவ லியனகே பிரான்ஸிஸ்
இல. 300/8, தளவதுகொடை வீதி,
மாதிவெல,
கோட்டே.

..............................................*பிரதிவாதி*

மேற்படி வழக்கில் எனக்களிக்கப்பட்டுள்ள விற்பனை கட்டளையின் பிரகாரம் மனுதாரருக்கு சாதகமாக பிரதிவாதியிடமிருந்து மனுவின்வேண்டுகோளில் விண்ணப்பித்துள்ளவாறு ரூபா எழுபத்தைந்து இலட்சம் (ரூ. 75,00,000) பணத்தை அப்பணத்திற்கு 1996 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 13 ஆந் திகதி முதல் அப்பணத்தை செலுத்தி முடிவடையும் வரை வருடத்திற்கு நூற்றுக்கு இருபத்தைந்து வீதம் (25%) அளவிலான வட்டியுடன் மனுதாரருக்கு மேற்படி பிரதிவாதியிடம் இருந்து அறவீடு செய்வதற்கு உத்தரவிடப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளபடியாலும்,

இங்குள்ள கீழே குறிப்பிடப்படும் அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள முழுமையான காணித்துண்டு ஒன்றும் அதில் அமைந்துள்ள கட்டிடங்கள் அதற்குரிய அல்லது சம்பந்தப்பட்ட உரிமைகளும் அதுவிடயமாக அதிலிருந்து அல்லது அதற்காக பிரதிவாதியின் அனைத்து காணிகள் உரிமைகள், உடமைகள், சொத்து உரிமைகோரல் மற்றும் வேண்டுகோள்கள் அடங்கலாக பிரசித்த நொத்தாரிசு திரு. ஏ. எம். ஏ. அத்தநாயகவினால் எழுதி ஒப்பமிடப்பட்ட இல. 224, மற்றும் 1994.03.01 ஆந் திகதியுடைய ஈட்டு ஆவனத்தின் பிரகாரம் மற்றும் அதன்படி மேற்கூறப்பட்ட பணத்தை அறவீடு செய்வது சம்பந்தமாக விதிக்கப்பட்டுள்ளதான மற்றும் நடைமுறையில் அறவிடுவதற்கு மனுதாரர் உரித்துரிமை உடையவர் என்று உத்தரவிடப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளபடியாலும்,

சிவில் (வர்த்தக) நீதிமன்ற அதிகாரம் செலுத்தப்படுகின்ற மேல் மாகாணத்தின் பிரதேச உயர் நீதிமன்றத்தின் இல. எச். சீ. (சிவில்) 40/ 2004(1) உடைய வழக்கினால் எனக்கு வழங்கப்பட்டுள்ள ஆணை பிரகாரம் கீழ் குறிப்பிடப்படும் உப அட்டவணையில் குறிப்பிடப் பட்டுள்ள சொத்துக்களை 2007 ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு குறித்த சொத்துக்கள் அமைந்துள்ள அதே இடத்திலேயே என்னால் பகிரங்க ஏலத்தின் மூலமாக விற்பனை செய்யப்படவுள்ளது.

### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டிகோறளை பள்ளேபத்துவ படகெத்தரயில் அமைந்துள்ளதும் வடக்கில் : கிராம சபை வீதியாலும் ; கிழக்கில் : இலக்கம் 2 காணித்துண்டாலும் ; தெற்கில் : இலக்கம் 2 காணித்துண்டாலும் ; மேற்கில் : அதேகாணியின் ஒரு பிரிவாலும் எல்லைகள் அமைந்துள்ளதும் அனுமதிபெற்ற நிலஅளவையாளர் திரு. கே. டீ. ஜீ. வீரசிங்கவினால் வரையப்பட்ட இலக்கம் 320 மற்றும் 1992.11.10 ஆந் திகதியுடையதுமான காணி உறுதிக்கமைய பரப்பளவால் பன்னிரெண்டு தசம் ஆறு ஐந்து பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 12.65பே.) அல்லது 0.0320 ஹெக்டயார் விஸ்தீரணம் கொண்டதும் முன்னர் கொழும்பு மற்றும் தற்பொழுது காணிப்பதிவகத்தில் எம். 1964/146 உரித்துடமையின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளதும் அளுபோகஹலந்த மற்றும் கோன்கஹவத்த என்றழைக்கப்படும் காணியில் குறிப்பிட்ட இலக்கம் 320 உடைய காணி உறுதியின் வரைவு அற்ற இலக்கம் 01 காணித்துண்டு என அடையாளமிடப்பட்டு பகிர்ந்து வேறு பிரிக்கப்பட்டுள்ளதும் மற்றும் குறித்த முழு காணித்துண்டுமாகும்.

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டிகோறளே பள்ளேபத்துவ படகெத்தரவில் அமைந்துள்ளதும் வடக்கில் : கிராம சபை வீதியாலும் ; கிழக்கில் : இலக்கம் 17 காணித்துண்டாலும் ; தெற்கில் : இலக்கம் 6 காணித்துண்டாலும் ; மேற்கில் : இலக்கம் 01 காணித்துண்டாலும் எல்லைகள் அமைந்துள்ளதும் அனுமதிபெற்ற நிலஅளவையாளர் திரு. கே. டீ. ஜீ. வீரசிங்கவினால் வரையப்பட்ட இலக்கம் 320 மற்றும் 1992.11.10 ஆந் திகதியுடையதுமான காணி உறுதிக்கமைய பரப்பளவால் பனிரெண்டு தசம் ஒன்பது மூன்று பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 12.93பே.) அல்லது ஹெக்டயார் 0.0327 விஸ்தீரணம் கொண்டதும் அளுபோகஹலந்த மற்றும் கோன்கஹவத்த என்றழைக்கப்படும் காணியில் குறிப்பிட்ட இலக்கம் 320 உடைய காணி உறுதியின் வரைவு அற்ற இலக்கம் 02 காணித்துண்டு என அடையாளமிடப்பட்டு பகிர்ந்து வேறு பிரிக்கப்பட்டுள்ளதும் மற்றும் குறித்த முழு காணித்துண்டும் மற்றும் அதில் அமைந்துள்ள அனைத்தும் மற்றும் துண்டு இலக்கம் 37 என அடையாளமிடப்பட்டுள்ள மற்றும் இலக்கம் 320 உடைய காணி உறுதியின் வரைவு அற்ற வீதி ஒன்றிற்காக ஒதுக்கப்பட்ட நிலத்தை வீதியாலும் மற்றும் அதன் மேலுள்ள அதற்கு சமமான உரித்துடமை யுடைய மற்றைய ஏனையோருடன் பொதுவாக பயன்படுத்தப்படும் பாதை உரிமை மற்றும் ஏனைய உரிமைகளுடனுமாகும்.

மேலே விபரிக்கப்பட்டுள்ள இலக்கம் 01 மற்றும் 02 உடைய காணித்துண்டு மேலே குறிக்கப்பட்ட படகெத்தரயில் அமைந்துள்ளதும் வடக்கே : கிராம சபை வீதியாலும் ; கிழக்கே : அதே காணியின் துண்டொன்றினாலும் மற்றும் டீ. கிரீன் பெரேரா மற்றும் ஏனையோரினால் உரித்துடமை கூறப்பட்டுள்ள சொத்துக்களினாலும் ; தெற்கில் : அனுமதிபெற்ற நிலஅளவையாளர் திரு. கே. டீ. ஜீ. வீரசிங்கவினால் வரையப்பட்ட இலக்கம் 297 மற்றும் 1997.07.02 ஆந் திகதியுடைய காணி உறுதியின் துண்டு இலக்கம் 01 இனாலும்; மேற்கில் : அதே காணியின் துண்டொன்றினாலும் எல்லைகளிடப்பட்டதும் அனுமதிபெற்ற நிலஅளவையாளர் திரு. கே. டீ. ஜீ. வீரசிங்கவினால் வரையப்பட்ட இலக்கம் 319 மற்றும் 1992.10.23 ஆந் திகதியுடைய வரைவுக்கமைய பரப்பளவால் இரண்டு ஏக்கர் முப்பத்திதெட்டு தசம் எட்டு பேர்ச்சஸ் (02ஏ. 00றூ. 38.8பே.) பரப்பளவு கொண்டதும் அளுபோகஹலந்த மற்றும் கோன்கஹவத்த என்றழைக்கப்படும் காணியின் குறித்த இலக்கம் 317 உடைய காணி உறுதியில் வரைவு அற்ற இலக்கம் 01 காணிதுண்டாக அடையாளமிடப்பட்டுள்ள பகிர்ந்து பிரிக்கப்பட்டுள்ள குறித்த முழு காணித்துண்டின் பகிர்ந்து பிரிக்கப்பட்டுள்ள குறிப்பிட்ட காணித்துண்டுகளாகும்.

**காணியைச் சென்றடையும் வழி.**- பிலியந்தலை நகரத்தில் இருந்து கெஸ்பேவ பக்கமாக 500 மீற்றர் வரை சென்று புவக்கஸ் சந்தியால் வலது பக்கமாகவுள்ள மடபாத வீதியில்இரண்டு மைல் தூரம் சென்றவுடன் நில்கமல் தொழிற்சாலை அருகில் படகெத்தர வீதியில் முந்நூறு மீற்றர் சென்று வலது புறமாக குறித்த சொத்து அமைந்துள்ளது. குறித்த சொத்து வடக்கில் : மாகந்துரை செல்லும் வீதியும் ; வடக்கிழக்கே ஆறு மீற்றர் அகலம் கொண்ட ஸா. மைகல் பூங்காவிற்கு செல்லும் பாதையும் அமைந்துள்ளது.

**கட்டணம் செலுத்தும் முறை.**- வெற்றிகரமான கொள்வனவுதாரர் ஏலவிற்பனை முடிவில் பின்வரும் தொகைகளைக் காசாக செலுத்த வேண்டும்:-

கொள்வனவு விலையின் பத்துவீதம் (10%) ; விற்பனை வரியாக உள்ளூர் அதிகார சபைக்கு செலுத்த வேண்டியது ஒரு வீதம் (1%) ; ஏலதாரர் கட்டணமாக இரண்டரை வீதம் (2 1/2%) விற்பனை நிலத்துக்கான நொத்தாரிசு உறுதிப்படுத்தல் கட்டணம் ரூபா 2000 இலிகிதர் மற்றும் கூவுவோர் கூலி ரூபா 500 விற்பனையின் பேரில் செலவிடப்பட்ட மொத்த விளம்பரச் செலவு, கொள்வளவு விலையில் மிகுதி 90% விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி லிமிட்டெட்டில் வைப்புச் செய்தல் வேண்டும்.

உறுதிகளை பரிசீலிக்கவும் மற்றும் மேலதிக விவரங்களுக்கும் : முகாமையாளர் : மர்சன்ட் பேங்க் ஒப் ஸ்ரீ லங்கா லிமிட்டெட், பேங்க் ஒப் சிலோன் மர்சன்ட் டவர் இல. 28, ஸெ. மய்கல் வீதி, கொழும்பு 03, தொலைபேசி இல. 4711711.

துசித கருணாரத்ன (ச. நீ.),
அனுமதிபெற்ற அளவையாளர்,
நீதிமன்ற ஆணையாளரும், மதிப்பீட்டாளரும்.

ரி. அன்ட் எச். ஒக்சன்,
இல. 50/3, விஹார மாவத்தை,
கொலொன்னாவ,
தொலைபேசி இல. 2696155, 2572940.

4- 398

---

## வரையறுக்கப்பட்ட ஹட்டன் நஷனல் வங்கி - மாத்தறை கிளை

1990 ஆம் ஆண்ன் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பெறுமதி மிக்க சொத்து பகிரங்க ஏல விற்பனை

**தென் மாகாணம், மாத்தறை மாவட்டம், கடவத ஸதரயும் மாநகர சபை எல்லைக்குள் பொல்ஹேன எனும் இடத்தில் பொல்ஹேன வீதியில் வரிப்பணம் இலக்கம் 60ஏ (பழைய இலக்கம் 63) என்ற இடத்தில் தன்திரிகே வத்தெ லொட் என்ற பெயரால் அழைக்கப்படும் காணியும் மற்றும் அதிலுள்ள கட்டடங்களும் அனைத்து சொத்துக்களும்.**

**விஸ்தீரணம் : 14.875 பேர்ச்சஸ்**

மாத்தறை பிரசித்த நொத்தாரிசு எஸ். ஏ. ஸெனரத் என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதும் ஹட்டன் நஷனல் வங்கிப் பெயரால் எழுதப்பட்டதுமான 1999.02.10 ஆந் திகதியதும் இலக்கம் 2026 முறியின் கீழ் வருமதியான கொடுப்பனவில் ஆடம்பரகே அனுர அல்விஸ்ஸும் நம்புகார வசம் டயலா பத்மினி ஸமரநாயகயும் கடனாளராக தவணை தவறியுள்ளாராதலால் ;

வரையறுக்கப்பட்ட ஹட்டன் நஷனல் வங்கி என் மீது அளிக்கப்பட்ட அனுமதியின் கீழ் கீழே குறிப்பிடும் சொத்து அமைந்துள்ள இடத்திலேயே 2007.05.08 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**தீர்மான அறிவித்தலுக்காக.**- 2007.01.19 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2007.02.08 ஆந் திகதிய "ஐலண்ட்" "திவயின" மற்றும் "தினகரன்" பத்திரிகைகளைப் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யப்படும் விதம்.**- ஏல விற்பனை முடிவில் வெற்றிகரமான கொள்வனவாளர் கீழே குறிப்பிட்ட கட்டணங்களைப் பணமாகச் செலுத்துதல் வேண்டும்:.

(1) கொள்வனவு விலையில் 10%;
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்த வேண்டிய கட்டணம் 1%;
(3) ஏலவிற்பனையாளரின் தரகுப் பணம் 21/2 ;
(4) எழுது வினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் 500 ;
(5) வேறு செலவினங்கள் ;
(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு அத்தாட்சிப்படுத்தப்பட்ட கட்டணம் ரூபா 2,000.

விலைக்கு வாங்கிய பணத்தில் 90% பங்கு பணத்தை 30 நாட்களுக்குள் வரையறுக்கப்பட்ட ஹட்டன் நஷனல் வங்கிக்கு செலுத்துதல் வேண்டும். 30 நாட்களுக்குள் செலுத்தத் தவறின் ஏற்கனவே செலுத்திய 10% தைத் திருப்பிச் செலுத்தாமல் இருக்கவும் சொத்தை மீள விற்பதற்கும் வங்கிக்கு உரிமை உண்டு.

உரிமைப் பத்திரங்களையும் மேலதிக விபரங்களையும் முகாமையாளர் "ஹட்டன் நஷனல் வங்கி - மாத்தளை கிளை, (தொ. பே. இல. 041-2222588)" அல்லது "கொழும்பு 10, டீ. பீ ஜாயா மாவத்தை, இலக்கம் 479, பிரதான அலுவலகம், பிரதான முகாமையாளர் (கடன் அறவீடு) இடமிருந்து, (தொலைபேசி இலக்கம் 2661815, 2661816)" இல் பெற்றுக் கொள்ள முடியும்.

என். எச். டி. எப். ஆரியரத்ன,
நீதிமன்ற ஆணையாளரும் அதிகாரம்
பெற்ற ஏலவிற்பனையாளரும்.

இல. : 34/31 மற்றும் 32,
நீதி சட்டத்தரணிகளின் அலுவலகத் தொகுதி,
கொழும்பு 12.

4-405

---

## மாவட்ட நீதிமன்றம் பதுளை

சங்கர அருணாசலம் பழனிவேல்
ஆயமூர்த்தி
இல. C/115, பதுளுபிட்டிய, பதுளை.

வழக்கு இலக்கம்: P278 .............*வழக்காளி*

01. ஆலயமூர்த்தி ஜெகதிஸ்வரம்
யூரி தோட்டம், பசறை.
02. எஸ். சுந்தரலிங்கம் மேல் பார்த்து
ஆலயமூர்த்தி நிரஞ்ஜனி,
மாபாகல பிரிவு,
யூரி தோட்டம், பசறை.
03. ஆலயமூர்த்தி ராமமூர்த்தி
இல. 16, யெல்வடன் தோட்டம்,
ஹாலி எல.
04. ஆலயமூர்த்தி சுந்தரமூர்த்தி மற்றும்
சுந்தரமூர்த்தி நிர்மலா
இல. C/115, பதுளுபிட்டிய, பதுளை.

....................... *எதிராளிகள்*

2006 ஆம் ஆண்டு யூலை மாதம் 27 ஆந் திகதி பதுளை மாவட்ட நீதிபதி அவர்களினால் இடைதீர்ப்பொன்றாக தீர்க்கப்பட்ட தீர்ப்பின் பிரகாரம் ஐந்து தரப்பினர்களுக்கு இடையில் பிரிக்கத்தக்க போதிய ஆதனம் அல்லாதபடியால் அந்த ஆதனத்தை விற்பனைப் பெறுமதிக்கேற்ப ரூபாத 8,60,000 க்கு மேல் பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு உத்தரவு

பிறப்பித்துள்ளதால் பதுளை மாவட்ட நீதிமன்றத்தால் வெளியிட்டுள்ள விற்பனை உத்தரவின் பிரகாரம் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் பேரில் 2007 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆந் திகதி அவ்வாதனம் அமைந்துள்ள இடத்தில் மு. ப. 10.00 மணிக்கு என்னால் பகிரங்க ஏலத்தின் மூலம் விற்பனை செய்யப்படும்.

**மிகவும் பெறுமதியான பதிவுக்குகந்த ஆதனமொன்று**

**அட்டவணை**

ஊவா மாகாணம், பதுளை மாவட்டம், பதுளை நகர எல்லைக்குள் பதுளை பிரதேச உதவி அரசாங்க அதிபர் பிரிவில், பதுளை கிழக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் பதுளுபிட்டிய கிராமத்தில் அமைந்துள்ள பதுளுபிட்டிய பாதையில் வரிப்பண இலக்கம் C/115 ஐக் கொண்ட திரு. எம். கே. சி. பிரேமச்சந்திரவினால் தயாரிக்கப்பட்ட இலக்கம் 125 மற்றும் 1979, செத்தெம்பர், ஒற்றோபர் திகதியிடப்பட்ட வரைபடத்தில் 93 ஆம் இலக்கத்தைக் கொண்ட காணித்துண்டாக விவரிக்கப்பட்ட வடக்கே: அவ்வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 80 உம்; கிழக்கே: மாநகர சபைக் காணியும்; தெற்கே: அவ்வரைப்படத்தில் காணித்துண்டு இலக்கம் 94 உம் ; மேற்கே : பாதையூடாக வேறாக்கப்பட்ட முனைக் காணித்துண்டும் ஆகிய எல்லைகளுக்குட்பட்ட ஆறு தசம் ஒன்று சைபர் பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 6.10பே.) அளவுடைய விசாலமான காணியும் அதிலமைந்துள்ள மேற்கூறிய வரிப்பண இலக்கம் C/ 115 ஐக் கொண்ட கட்டிடமும் அதற்குட்பட்ட அனைத்துமாகும்.

இக்காணிக்காக இவ்வழக்குக்கான 'X' என அடையாளமிடப் பட்டுக் கோவைப்படுத்தியுள்ள உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் திரு. எம். பி. குணரத்னவினால் 2005 ஆம் ஆண்டு சனவரி மாதம் 26 ஆந் திகதி அளவையிடப்பட்டு தயாரிக்கப்பட்ட இலக்கம் 2045 ஐக் கொண்ட வரைபடத்தின்படி வடக்கே : வர்ஜினா உம்மா உரிமைகோரும் காணி ; கிழக்கே : பி. பி. பாத்திமா மற்றும் ஏனையோர் உரிமைகோரும் காணி ; தெற்கே : சாஹுல் ஹமீட் உரிமைகோரும் காணி ; மேற்கே : பாதையூடாகவுள்ள பாதுகாக்கப்பட்ட காணி ஆகிய எல்லைகளுக்குட்பட்ட ஆறு தசம் இரண்டு ஐந்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 06.25பே.) அளவுடைய விசாலமுள்ள பிரித்தொதுக்கப்பட்ட காணித்துண்டும் அதற்குள் அமைந்துள்ள கட்டிடம் உட்பட அனைத்துடனுமாகும்.

இவ்வாதனம் பதுளை மாவட்டக் காணிப்பதிவு அலுவலகத்தில் A86/87 மற்றும் A 100/92 இன் கீழ் பதியப்பட்டுள்ளது.

**காணிக்குப் பிரவேசித்தல்.**- பதுளை நகரத்திலிருந்து வின்சன் டயஸ் விளையாட்டு மைதானமருகில் மயானத்திற்குச் செல்லும் (பூங்காவுக்கருகில்) பாதையில் சுமார் 1/2 கிலோ மீட்டர் சென்று நீர்த்தாங்கி அருகில் முதலாம் ஒழுங்கையூடாகக் காணியைச் சென்று அடையலாம் (இலக்கம் C/115 பதுளுபிட்டிய, பதுளை).

**கட்டணம் செலுத்தும் முறை.**- கொள்வனவு செய்பவரை முடிவு செய்த உடனே மிகக் கூடிய கேள்வியுடையவரினால் கீழ்க்காணும் செலுத் துதல்களை ஏலதாரருக்குப் பணத்தால் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் (நூற்றுக்கு இருபத்தைந்து) 25% ;
(2) ஏலதாரரின் தரகுப் பணமாகக் கொள்வனவு விலையின் 2 1/2% ;
(3) உள்ளூராட்சி நிறுவனத்திற்கு (நூற்றுக்கு ஒன்று) 1%;
(4) விற்பனைக்காகச் செலவான அனைத்து விளம்பரச் செலவுகள் ;
(5) கொள்வனவு விலையின் மிகுதி (நூற்றுக்கு எழுபத்தைந்து) 75% பணம் விற்பனைத் திகதியிலிருந்து ஏழு (07) நாட்களுக்குள், சம்பந்தப்பட்ட வழக்கின் பற்றுக்காக பதுளை மாவட்ட நீதிமன்றத்திற்குச் செலுத்தி முடிவடைய வேண்டும்.

டபிள்யூ. ஜயதிலக்க,
(சமாதான நீதவான்),
நீதிமன்ற ஆணையாளர்,
பகிரங்க ஏலதாரர்,
மதிப்பீட்டாளர்.

இலக்கம் 48/1,
கலுகல்பிட்டிய,
பதுளை.
தொலைபேசி இல. : 055-2230846.

4-384